முருகப்பெருமான் துணை

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்** பாகம் : 1546

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**23.12.2023**, சனிக்கிழமை

1. ஞானஒளி கண்ட அரங்கனே
ஞானவெளி கண்ட தேசிகனே
தான தர்மத்தின் பலம் கொண்ட குருராஜனே
தர்மனே உந்தனுக்கு சுப்ரமணியர் யானும்
2. யானும் ஞான அறிவுரை ஆசி
வழங்குவேன் சோபகிருது சிலை திங்கள் தன்னில்
(சோபகிருது வருடம் மார்கழி மாதம் 07 ம் நாள், 23.12.2023, சனிக்கிழமை)
வானவர்கள் மெச்சும் மாதர்மத்தை
வாரி வழங்கி உலகமெல்லாம் தர்மபலம் பெருக்கி
3. பெருக்கியே உன்வழி தர்மஞானபலம் கொண்ட சீடர்களை
தக்க தொண்டர்களாக்கி உலகமெல்லாம்
அரங்கன் உன் தர்மத்தை பரப்பச் செய்து
ஆற்றல்பட ஜீவகாருண்யம்பட உலகை இயக்க
4. இயக்கவே அற்புதம் அருளுகின்ற அரங்கனே
உயர்வாக நீ தரும் தீட்சை சிறப்பானது
தயவாக நீ காட்டும் வழிமுறைகள் சிறப்பானது
தக்கபடி உன்னையே குருவாய் ஏற்று
5. ஏற்றுமே உலகோர் தொடர்ந்து வந்தால்
இந்த உலகில் அற்புதம் ஞான ஆட்சிக்காலமாக
ஞானிகள் விரும்புகின்ற ஞானசித்தர் காலமாக
ஞாலமதில் மாற்றம் கூடி அற்புதம் நிகழும்
6. நிகழவே அரங்கன் நீயே சிறந்த ஞானி
நிலவுலகின் ஆற்றல் பொருந்திய ஞானி
வலம் வந்து உன் திருவடி பற்றி
வையகத்தார் தீட்சை ஏற்றால்

7. ஏற்றவர்க்கெல்லாம் இனி பிறவாத பேறு
இலகுவாய் சித்திக்க நேரும்
ஆற்றல்பட அரங்கன் சன்மார்க்க உயர் நெறியை
அகிலத்தார் பின்பற்ற பின்பற்ற

8. பின்பற்றும் உலகமெல்லாம் பேதம் கடந்த
பிரம்ம ஞான சூட்சுமங்கள் அறிந்த
பிரணவ சித்திமிகு மக்களாக
உலகோர் எல்லம் ஆற்றல் கூடி

9. தர்மவான் உன் அருளாலே
தரணியில் ஞானவான்களாக சிறந்து
ஞான ஆட்சிக்காலம் உதயமாகும்
ஞான அறிவுரை ஆசி முற்றே

—சுபம்—